**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.189/2023 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மேகலா | க–பெ | மோகன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 44/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி ஆசிரியை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**
**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து உதவி ஆசிரியை பணி செய்து வருகிறேன். 2023 வருடம் நான் காரைக்குடி மகரிஷி வித்தியா மந்தீர் பள்ளியில் ஆசிரியையாக பணி செய்து வந்தேன். எனக்கு 2 மகன்கள் உண்டு, பெரிய மகன் பெயர் நிரஞ்சன், இளைய மகன் பிரதீப். பெரிய மகன் 10ம் வகுப்பு படித்து வந்தார். இளைய மகன் மேற்படி பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். நானும் எனது இளைய மகன் பிரதீப்பும் பள்ளிக்கு Scooty இருசக்கர வாகனத்தில் சென்று வருவோம். குறிப்பாக 10.01.2023 அன்று என்னுடைய பெரிய மகன் நிரஞ்சன் சைக்கிளில் பள்ளி முடித்து விட்டு வீட்டிற்கு முன்னால் சென்று கொண்டிருந்தார். நானும் எனது இளைய மகனும் இருசக்கர Scooty வாகனத்தில் பின்னால் சென்று கொண்டிருந்தோம். மேற்படி வாகனத்தை நான் ஓட்ட எனது பின்னால் எனது இளைய மகன் அமர்ந்திருந்தார்.

சூடாமணிபுரம் வசந்தி பேக்கரி அருகே உள்ள வேகத்தடை தாண்டி நான் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி பட்டுக்கோட்டை செல்லும அரசு பேருந்து ஒன்று (மேற்படி வழித்தடம் பேருந்திற்கு அங்கு கிடையாது) வேகத்தடையை கவணிக்காமல் சம்பவ சாலையின் இடதுபுறமாக அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், வந்தது என்னுடைய பெரிய மகன் நிரஞ்சன் அந்த வேகத்தடையை கடந்து சென்று விட்டார். இதனை அரசு பேருந்தின் ஓட்டுநர் கவணிக்காமல் இடது புறமாக அவர் மீது மோதி விட்டார். அதில் அவர் தூக்கி எறியப்பட்டார். இதனால் அவருக்கு காதுடன் சேர்த்து பின்னந்தலையில் காயங்கள் ஏற்பட்டு மயக்க நிலைக்கு சென்று விட்டார். நான் அவர்களை பார்த்துவிட்டு அருகில் உள்ள டீ கடையில் இருந்த நபர்கள் அங்கு வந்து விட்டார்கள். அதில் இருந்த நபர் ஒருவர் எனது கணவர் ஒருவருக்கு தகவல் தெரிவித்தார். அந்த வழியாக வந்த கார் ஒன்றின் உதவியுடன் காரைக்குடி KMC மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து

சென்றோம். போலீசார் அங்கு வந்து விசாரணை செய்தார்கள். அவர்களிடம் மேற்படி விவரங்களை சொல்லி புகார் அளித்தேன். விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுநரை என்னால் பார்த்தால் அடையாளம் காண இயலும், மேற்படி ஓட்டுநரின் பெயர் ராதா என்றும் அவர் கொத்தமங்களம் பகுதியை சேர்ந்தவர் என்றும் போலீசார் விசாரணையில் நான் தெரிந்து கொண்டேன்.

எதிரி இன்று ஆஜர் இன்மையால் முதல் விசாரணை தொடர்ச்சி அரசு தரப்பு வேண்டுகோலுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:43:54 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.